Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.269/2022 Date:12.08.2026.
Deposition of witness for prosecution: PW 1 ( LW1 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | சல்மான் பாரிஸ் ராஜா | Village | கம்பம் |
| Father/ Husband Name | அப்துல் சமது | Taluk | உத்தமபாளையம் |
| Age | 27 /2026 | Calling | கடை |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 12.08.2026 TIME 11.35 **AM/PM**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது கம்பத்தில் குடியிருந்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 6 வருடத்திற்கு முன்பு எதிரி இருந்த இடத்திற்கு சென்றேன். அங்கு கூட்டமாக இருந்தார்கள். என்ன சத்தம் என பார்ப்பதற்கு நான் சென்றபோது அங்கே ஏற்பட்ட தள்ளுமுள்ளில் நான் கீழேவிழுந்ததில் ஊமைக்காயம் ஏற்பட்டது. நடந்த சம்பவத்தைப் பற்றி காவல் நிலையத்தில் சொல்வதற்கு சென்றபோது காவல் நிலையத்தில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டபடும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் **அசாஆ.1** ஆகும். புகாரில் எழுதியுள்ள விபரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 29.05.2020ம் தேதி அன்று ஏற்கனவே 10 தினங்களுக்கு முன்பாக நான், முகநூலில் தகவல் பதிவிட்டது குறித்து எதிரி ஆபாசமாக விமர்சனம் செய்திருந்தார் என்றும், இதுகுறித்து கேட்டதற்கு நேரில் சென்ற போது எதிரியும், அவரது நண்பர்களும், என்னை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, என்னை கையால் அடித்து கீழே தள்ளினார்கள் என்றும், நான் ஓடிச்சென்ற போது, என்னை பார்த்து கொலை மிரட்டல் செய்தார்கள் என்றும், புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல. நான் தற்போது எதிரிகளுடன் சமரசமாகி நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd. P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.